முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அவ்வாறு புகார்கள் வரப்பெறுகின்ற அந்தப் பேருந்துகளுடைய உரிமங்களை இரத்து செய்வதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி ஏதேனும் புகார் வரப்பெற்றால், அதிகக் கட்டணம் வசூலிப்பதாகப் புகார் வரப்பெற்றால், நிச்சயம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

19—

ஆரம்ப சுகாதார நிலையம்

*__*5496—திரு. ந. நஞ்சப்பன்:__*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

நடப்பு நிதியாண்டில் அமைக்கப்படும் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒன்றாக தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் பகுதியும் மாண்புமிகு அம்மாவின் அரசால் ஏற்கெனவே மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றியைத்*

தெரிவித்துக்கொள்கிறேன். ஒகேனக்கல் மிகச் சிறந்த சுற்றுலா மையமாகும். அந்தச் சுற்றுலா மையத்திற்கு வெளி மாநிலங்களிலிருந்தும், அண்டை மாநிலங்களிலிருந்தும், குறிப்பாக கேரளா, கர்நாடகாவிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் வருகின்றனர். விடுமுறை நாட்களில் அளவு கடந்த கூட்டம் வருகிறது. விபத்துகள் ஏற்படுகின்றன. ஆற்றில் செல்வோரை விபத்து போன்றவற்றிலிருந்து பாதுகாக்க, அவசரமாக அங்கே சுகாதார நிலையம் அமைப்பது அவசியமாகிறது. அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு விரைந்து அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஒரு மலை கிராமம் ஆகும். ஒகேனக்கல் கிராமம் வனப்பகுதியைச் சார்ந்த நீர்வீழ்ச்சி சுற்றுலாத் தலமாகும். மேலும், இங்கு நீர்வீழ்ச்சி உள்ளதால், அடிக்கடி விபத்துகள் நடக்க வாய்ப்புள்ளதாலும், அவசர சிகிச்சை, சுற்றுலாப் பயணிகள் வருகை மற்றும் கர்நாடக எல்லையில் தமிழக மக்களுக்கு மருத்துவ சேவை அளிக்க வசதியாக இருப்பதாலும், மலைப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க உண்டான விதிமுறைக்குட்பட்டிருப்பதாலும், மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு இக்கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க பரிந்துரை செய்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இடவசதியும் அங்கே இருக்கிறது; அரசு நிலமும் இருக்கிறது. அதனால், அதனை அமைப்பதிலும் சிரமம் இல்லை. விரைந்து அமல்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2012 நவம்பர் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்த மாமன்றத்தின் தலைவராகவும், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் துணைத் தலைவராகவும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு என் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட நட்டாலம் ஊராட்சியில் ஒரு தொடக்கப் பள்ளி பல ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கிறது. அருகில் பல பள்ளிகள் தற்போது இயங்கி வருகின்றன. அந்த இடமும், கட்டடமும் ஊராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளன. அங்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமானால் மலைப் பகுதியில் 20 ஆயிரம் மக்கள் தொகையும், சமவெளிப் பகுதியில் 30 ஆயிரம் மக்கள் தொகையும் இருக்க வேண்டும். மேலும், 8 கிலோ மீட்டர் தொலைவிற்குள் வேறு ஆரம்ப சுகாதார நிலையங்களோ, வேறு அரசு மருத்துவமனைகளோ இருக்கக்கூடாது. மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை இந்த விதிமுறைகளுக்கு உட்பட்டிருந்தால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் கனிவுடன் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

2012 நவம்பர் 1]

திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது செங்கம் தொகுதிக்குட்பட்ட தண்டராம்பட்டு வட்டத்திலே சாத்தனூர் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை விதிமுறைகளுக்கு உட்பட்டிருந்தால் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் கனிவுடன் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொதக்குடி ஊராட்சியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் கட்டிமுடிக்கப்பட்ட கூடுதல் கட்டடம் கடந்த ஒன்றரை ஆண்டுகாலமாக உபயோகப்படுத்தாமல் வீண் செய்யப்பட்டுள்ளது. இதை உடனே உபயோகப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து கருத்துரு பெறப்பட்டு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*